செ.வெ.எண்: 51 / மார்ச் /2020 நாள்: 17.03.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் பொது சுகாதாரத்துறையின் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவர்கள், அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், நகராட்சி, மாநகராட்சி அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் இதர துறையினர்களுக்கும், கிருமி நாசினி, கைகழுவும் திரவம் தயாரிப்பது தொடர்பாக செயல் விளக்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.03.2020) நடைபெற்றது.**

---------------

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் தமிழக அரசு மேற்கொள்ளப்பட்டு வருவதன் காரணமாக தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லை என்ற நிலையிலும், இந்த நோய் கர்நாடகா, கேரளா, மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு பரவாமல் தடுப்பதற்கு ஆம்னி பேருந்துகள் மற்றும் சுற்றுலா பேருந்துகளை அரசு பேருந்துகள், முழுமையாக கிருமி நாசினி கொண்டு, தூய்மை படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்து கழகம், வட்டார போக்கு வரத்து கழகமும், இணைந்து செயல் பட்டு வருகிறது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இந்தியா திரும்பும் சூழ்நிலை ஏற்பட்டால் தேவைக்கேற்ப அவர்களை உலக சுகாதார நிறுவனத்தின் வழிமுறைகளின் படி 14 நாட்கள் தனிமைப்படுத்தி கண்காணிக்க தேவையான வசதிகள், அந்தந்த விமான நிலையங்களின் அருகிலேயே, ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அண்டை மாநிலங்களில் இருந்து கொரோனா வைரஸ் நோய் நமது மாநிலத்தில் பரவாமல் கட்டுபடுத்துவதற்கு உடனடியாக எல்லையோர மாவட்டங்களில் உள்ள கண்காணிப்பு சோதனை சாவடிகளில், நோய் கண்காணிப்பு பணிகள் மற்றும் தூய்மை படுத்தும் பணிகளை போர்கால அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வருவாய்துறை, காவல்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்திவுள்ளார்.

நமது மாவட்டத்தில் உள்ள திரையரங்குகள் வணிக வளாகங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களான கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் ஆகியவற்றை தூய்மை படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் மற்ற மாநிலங்களுக்கு பயணிப்பதையும், பொது இடங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதையும் அடுத்த 14 நாட்களுக்கு தவிர்க்க வேண்டும். கூட்டம் நிறைந்த பொது இடங்களுக்கு வயதானவர்கள் , நோய்வாய்பட்டவர்கள், குழந்தைகள், மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் அனைவரும் தனி நபர் சுகாதாரத்தினை பேண வேண்டும்.

குறிப்பாக வீட்டிற்குள் நுழையும் போதும், அவ்வப்போது கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவும் பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும். கொரோனா வைரஸ் நோய் 80 சதவீதம் கைகள் மூலமாகவே பரவுகிறது.

கைகளை சுத்தம் செய்யாமல் முகத்தை தொடவேண்டாம். இருமும் போதும், தும்மும் போதும், கைக்குட்டையை பயன்படுத்த வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் விடுமுறை நாட்களின் போது குழுவாக சேர்ந்து விளையாடாதவாறு கண்காணிக்க வேண்டும். விளையாடிய பின் வீட்டிற்குள் நுழைந்தவுடன் அவ்வப்போதும் கைகளை சோப்புப் போட்டு சுத்தமாக கழுவ வேண்டும். பொது இடங்கள் மற்றும் வாகனங்களை தூய்மைபடுத்தும் பணி மேற்கொள்ளும் போது மருத்துவத்துறையினர் Lisol பயன்படுத்த வேண்டும்.

ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளில் கைகழுவும் பழக்கம் 20 ஆண்டுகளாக கடைபிடிக்கப்பட்டு வருவதால் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தால் இந்த நாடுகளில் பாதிப்பு இல்லை. எனவே நாமும் சோப்பு போட்டு கைகழுவும் பழக்கத்தை கடைபிடித்தால் இந்நோயிலிருந்து நம்மை நாம் தற்காத்து கொள்ள முடியும்.

அனைத்து தரப்பு மக்களும் அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவர்கள், அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், நகராட்சி, மாநகராட்சி அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் இதர துறையினர்களுக்கும் கிருமி நாசினி கைகழுவும் திரவம் தயாரிப்பது தொடர்பாக செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் சுகாதார பணிகள் டாக்டர். அ.சுப்ரமணி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.வனிதா, இணை இயக்குநர் குடும்பநலம் டாக்டர்.கோபிநாத், மாநகர் நல அலுவலர் டாக்டர்.ஜெகநாதன், மகளிர் திட்ட அலுவலர் திரு.சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**